``

# வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும் தவணைப் பரீட்சை, மார்ச் - 2020

**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, March - 2020**

FWC

| தரம் :- 12 (2021) | நாடகமும் அரங்கியலும் | புள்ளித்திட்டம் |
|---|---|---|

## பகுதி I

| | | | |
|---|---|---|---|
| 1) 3 | 11) 2 | 21) 1 | 31) 3 |
| 2) 2 | 12) 1 | 22) 5 | 32) 2 |
| 3) 1 | 13) 1 | 23) 3 | 33) 5 |
| 4) 3 | 14) 3 | 24) 2 | 34) 2 |
| 5) 4 | 15) 1 | 25) 5 | 35) 3 |
| 6) 5 | 16) 3 | 26) 3 | 36) 4 |
| 7) 3 | 17) 4 | 27) 1 | 37) 3 |
| 8) 5 | 18) 5 | 28) 4 | 38) 1 |
| 9) 3 | 19) 4 | 29) 3 | 39) 1 |
| 10) 3 | 20) 2 | 30) 4 | 40) 3 |

## பகுதி - II

*01.*

1. ஆற்றுகைக் கலைகள் என்பவை ஒருவர் அல்லது பலர் சிலர் முன்னே அந்தக் கலை விடயத்தை
ஆற்றிக் காட்டுதல் அல்லது நிகழ்த்திக் காட்டுதல் ஆற்றுகைக் கலைகளாக இசை, நடனம், நாடகம், சினிமா என்பன

agaram.lk

**2.**

| மேடை நாடகம் | வானொலி நாடகம் |
|---|---|
| ■ கட்புல செவிப்புலக்கலை | ■ செவிப்புலக்கலை |
| ■ அரங்க வெளியில் நிகழ்த்தப்படும். | ■ கேட்போரின் மனமே அரங்கு. |
| ■ பார்ப்போரை உடனெதிர் கொள்வது. | ■ ஒலிப்பதிவு செய்யப்பட்டு பின்னர் ஒலி பரப்பப்படும். |
| ■ ஒவ்வொரு பாத்திரங்களையும் ஒவ்வொருவர் ஏற்பார். | ■ ஒருவரே பல பாத்திரங்களை ஏற்று நடிக்க முடியும். |
| | ■ பார்ப்போரின் மனம் |

| மேடை நாடகம் | தொலைக்காட்சி நாடகம் |
|---|---|
| ■ அரங்க வெளியில் நிகழ்த்தப்படும். | ■ ஒளிப்பதிவுக் கருவியின் முன் நிகழ்த்தப்படும். |
| ■ கட்புல செவிப்புலக்கலை. | ■ தொழிநுட்பக்கலை |
| ■ நடிகர், பார்ப்போர், அரங்கு பிரதானம். | ■ கமராவே பிரதானம் |
| ■ கால அளவைக் கொண்டது. | ■ தொடராகவே அமையும் |
| ■ நிஜம் | ■ நிழல் |

3. போலச் செய்வது, மோதுகையைச் சித்தரிப்பது, கணப்பிரசன்னமானது, முரணைச் சித்தரிப்பது, நிகழ்த்து கலை, செய்து காட்டுவது, ஊடாட்டமுடையது, ஒன்றினைப்பது
(இவற்றுள் நான்கை விளக்கல் வேண்டும்)

02. 1. கதைப்பின்னல்

- கதைப்பின்னல் என்பது சம்பவங்களின் நிரலொழுங்கு
- அர்த்தப்பிரகிருதிகள் எனவும் அழைக்கப்படும்
- சமஸ்கிருத கதைப்பின்னலில் ………………........ஆகிய ஐந்து கூறுகளையும் எடுத்துக்காட்டி விளங்கியிருப்பின் புள்ளிகள் வழங்காலாம்

கட்டமைப்பு

- கட்டமைப்பு ஐந்து படிநிலைகளைக் கொண்டது
- இப்படிநிலை ஆரம்ப, பிரயத்தன, பிரத்தியா………………… (5 புள்ளிகள்)

2. அ) லோக தர்மி
ஆ) நாட்டிய தர்மி பற்றி விளக்கியிருப்பின் புள்ளிகள் வழங்கவும் (5 புள்ளிகள்)

3. சிருங்கார :- அன்பு, காதல்
ஹாஸ்ய :- சிரிப்பு, மகிழ்ச்சி
கருணா :- சோகம்
பயானக - பயம்
பீபத்ஸ - அருவருப்பு
ரௌத்திர – கோபம்
அற்புத - வியப்பு
வீர - உற்சாகம்

03. 1. **பலே**

- 16 ம் நூற்றாண்டில் இத்தாலி, பிரான்ஸ் தோன்றியது
- 19 ம் நூற்றாண்டில் உலகெங்கும் வியாபித்த தொல்சீர் வடிவம்
- பின்னனிக் காட்சிகளுக்காக ஒளி, வேடஉடை, ஒப்பனை பயன்படும்
- நடனப் பணியினை ஊடகமாகக் கொண்டது

**ஒபேறா**

- கி.பி 1600 களில் இத்தாலியில் மறுமலர்ச்சிக் காலத்தில் தோன்றிய ஒரு நாடக வடிவமாகும்
- பாடல், வாத்திய இசை, ஆகியவற்றைப் பிரதானமாக கொண்டது
- காவிய மொழிப்பண்பாடு
- பீஜிங் ஒப்பேறாவில் பொருளாதார, சமூகப்பிரச்சினைகள் ஆழமாக முன்வைப்பவர்

**பதார்த்தபாணி**

- உள்ளதை உள்ளபடி சித்தரித்து காட்டுவது.
- இயல்பான அபிநயங்களைக் கொண்டது.
- இயல்பான வேட உடை, ஒப்பனை காட்சிகளைக் கொண்டது.
- நடிப்பு, உரையாடல் இயல்பானதாக அமையும்.

**இசை நாடகம்**

- பாடலே முக்கியமாக இடம்பெறும், பல்வேறு நாடகப்பாடற் பாணிகள் பயன்படுத்தப்படும்
- இதை கதை அம்சமாகப் புராண, இதிகாச, தெவபவ கதைகளும் நாட்டார் கதைகளும் அடிப்படையாகக் கொண்டிருக்கும்
- பாடலின் பொருளை மேம்படுத்த உடலசைவுகள் பயன்படுத்தப்பட்டன. சிங்களத்தி இதனைநுார்த்தி என அழைப்பார்

agaram.lk

**நடன நாடகம்**

- இந்நாடகங்களில் இலங்கையில் நிருத்திய என பெயர் பெற்றது
- கீழேத்தேய நிருத்திய நாடகங்கள் அடிப்படையாகக் கொண்டது
- நடனமே பிரதான வெளிபாட்டு ஊடகம்
- மேலைத்தேய பலே நாடகத் தாக்கம் இறுதிலுள்ளது
- மேடையலங்காரம் பல்வேறு வகையில் பயன்படுத்தப்பெறும்

*04.* 1. ஆங்கிலேயரின் ஆட்சி காலத்தில் அவர்கள் தோற்றுவித்த புதிய நகரத்திற்கும் தமிழ் சமூகத்தின் பிரபுத்துவ விழுமியங்களுக்கும் இடையிலான முரண்பாடு செல்லம் குடும்பத்தின் பிரச்சினைகளுடன் ஆரம்பித்துசோமு, கமலிஇணையம் வரையான விடயங்கள்

2. மஹாகவி உருத்திரமூர்த்தி, முருகையன், அம்பி

3. பாத்திரங்கள்
மாணிக்கம், கமலி, கணேசு, சோமு, பஞ்சையர், செல்லம், முருகப்பு, விதானை இவற்றில் எதாவது மூன்றைக்குறிப்பிடுதல்
உதாரணமாக
மாணிக்க பாத்திரத்தின் குணஇயல்பு
   - நாதஸ்வரக் கலையை உயிராக மதிப்பவர்
   - சமூகம் பற்றிய ஆழ்ந்த பார்வைக்கொண்டவர்
   - நிதானமும் பொறுமையுடன் உடையவர்
   - இறை பக்தியுள்ளவர்
   - கலையார்வம உள்ளவர்
   - சீடனை மதிக்கும் பண்பு கொண்டவர்

4. பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தையும் அக்காலத்து அபிவிருத்தி விடயங்களையும் சமய விழுமியங்களையும், வாழ்வியல் பண்பாடுகளையும் சுட்டிக்காட்டி எழுதப்பட்டிருப்பின் புள்ளி வழங்கவும்.

agaram.lk

*05.* 1. கதைப்பின்னல், சிந்தனை, பாத்திரம், சொற்றிறன் மொழி, இசை, காட்சி

2. மேற்குறித்த அவலச்சுவையின் இலக்கன 6 உறுப்புக்களின் தொழிற்பாடு பற்றிய பண்பாடு பற்றி விளக்கபடல் வேண்டும்
உதாரணமாக
கதைப்பின்னல் : அரிஸ்சோட்டில் குறும் முதன்மையான பாண்பு ஆகும்............. தொடர்பை கொண்டு இருக்கும்

சிந்தனை : காலமும் இடமும் பொருந்துமாறு நாடக சம்பவங்களைக் கூறுகின்ற திறன் சிந்தனை எனப்படும்

பாத்திரம் : பாத்திரம் எது எதைச் செய்யும் எது எதைப்பேசும் என்பதைப் பற்றிய தொழிற்பாட்டாக்கமாகும்

சொற்றிறன் : பாத்திரங்களின் கருத்தை வெளிபடுத்தும் பேச்சும் பாடலும் தான் சொற்றிறன் எனப்படும்

இசை : இசையால் விளையும் இன்பம் அவல நாடகங்களில் விளையும் துணை இன்பங்களுட்சிறந்தது

காட்சி : நாடக அரங்கில் காட்சிப்படுத்துகின்ற எல்லாம் காட்சிகள் அன்றேல் காண்பியங்கள் என கூறப்படுகின்றது நடிகனோ, நடிகையோ கூட ஒரு காண்பியந்தான்

3. காலம்
இடம்
செயல் / இயக்கம்

உதாரணமாக
காலம் : நாடகத்தில் வரும் சம்பவம் அன்றேல் நிகழ்வு நடைபெற்ற காலப்பகுதியாகும்

இடம் : நாடக சம்பவங்கள் நடைபெற்ற இடமாகும்

செயல் : நிஜத்தில் நடந்த அன்றேல் நடந்ததாகக் கருதப்படும் சம்பவங்கள்

06. 1. சோபோகிளஸ்
- கிரேக்க நாடக ஆசிரியர் கிமு 496 - 406
- உயர் குடும்பத்தில் பிறப்பு
- மூன்றாவது நடிகனை அறிமுகப்படுத்தினார்
- 100 ற்கும் மேற்பட்ட நாடகங்களை எழுதினார்
  உதாரணம் : அன்ரிக்கனி, .......
- கோரலின் எண்ணிக்கையைக் குறைத்தார் (15)

2. குழந்தை சண்முகலிங்கம்
- இவர் நடிகராக, எழுத்தாளராக ஆய்வாளராக விமர்ச்சகராக பணிபுரிந்து வந்தார்.
- நூற்றுக்கும் மேற்பட்ட நாடகங்களை எழுதியுள்ளார்.
- நவீன தமிழ் நாடக ஆசிரியராக பணிபுரிந்தவர். பாடசாலை நாடகங்கள், சிறுவர் நாடகங்கள் என பல எழுதியுள்ளார்.
- புதுமை அரங்கினை கல்வி அரங்கச் செயற்பாடுகளூடாக கொண்டு வந்தாள்.
- புதுமை அரங்கினை கல்வி

3. மகாகவி உருத்திரமூர்த்தி
- நாடக ஆசிரியர்.
- கோடை, புதியதொரு வீடு நாடகங்களை எழுதியுள்ளார்.
- போச்சோசை பொருந்திய கவிதையின் பிதாமகர்.
- மண்வாசைன ததும்பிய சந்த மொழியை கையாண்டவர்.

agaram.lk

4. அரிஸ்ரோபேன்ஸ்
- பழைய மகிழ்நெறி நாடகாசிரியர் ஆவர்
- கி.மு 448 – 380 காலப்பகுதியில் வாழ்ந்தவர்
- இன்யியல் நாடகத்தின் தந்தைதை
- கற்பனை நிறைந்த விடயங்கள் மக்கள் மத்தியில் பேசப்படும்
- மேகங்கள், குளவிகள், அமைதி, பறவைகள், தவளைகள் என்பன அவற்றுட்சில

5. மோணான்யர்
- கிரேக்கப்புதிய மகிழ்நெறி நாடகாசிரியராக கருதப்படுகின்றார்
- கி.மு 343 இலிருந்து 291 வரையிலான காலப்பகுதியில் வாழ்ந்தவர்
- 105 நாடகங்களை எழுதியுள்ளார்
- சமியா, அபிட்சன் போன்றன முக்கிய படைப்புக்கள் ஆகும்
- கிரேக்க அரங்கை யதார்த்தம் நோக்கித் திசை திருப்பினார்